கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 75/2023

வா.சா.1 - ஜெயசீலன்

நாள். 11.02.2026 த/பெ - சிலுவை ஆண்டணி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 1, 2, 4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 வீட்டு தீர்வை செலுத்தும் சமயத்தில் அவ்வாறு வீடே இல்லை என்றால் சரியல்ல. 2023-2024 காலகட்டத்தில் தாவா சொத்தில் வீடு இல்லாத நிலையில் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 வீட்டு ரசீது ஏற்க கூடியதல்ல என்றால் சரியல்ல, நான் கிரையம் பெறும் சமயத்தில் வீடு இருந்ததால் தான் வீட்டு வரி ரசீது வழங்கப்பட்டது. வழக்கு சொத்தின் தெற்கு பக்கம் உள்ள வீடு யார் பெயரில் உள்ளது என்றால் எனது மகன் ஸ்டெர்னி பெயரில் உள்ளது.

2) வழக்கு சொத்தின் தெற்கு பக்கமுள்ள வீடும், அதனை சார்ந்த இடமும் வழக்கு சொத்தும் சேர்ந்த நிலையாக உள்ளது என்றால் சரிதான், முன்னர் தனித்தனியாக வேலி அமைக்கப்பட்டிருந்தது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 3 மின் இணைப்பு அட்டை எப்போது பெறப்பட்டது என்றால் நான் வழக்கு சொத்தில் உள்ள வீட்டை கிரையம் செய்த பின்பு மின் இணைப்பு அட்டை வாங்கினேன். மின் இணைப்பு தற்போது இல்லை என்றால் சரியல்ல, தற்போதும் மின் இணைப்பு உள்ளது.

3) வழக்கு சொத்தில் தற்போது வீடு இல்லாத நிலையில் மேற்படி மின் இணைப்பு எந்த வீட்டிற்காக பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றால் அதே சர்வே எண்ணில் சிறிய ரூம் போன்ற அமைப்பில் மின் இணைப்பு உள்ளது. நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை



MITHUNA A KAISER Digitally signed by MITHUNA A KAISER Date: 2026.02.11 15:53:02 +0530

பார்வையிடும் போது மேற்படி சிறிய அறை இருந்ததா என்றால் அப்போது இல்லை. ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையில் சிறிய அறை இருந்ததாகவோ, அதில் மின் இணைப்பு இருந்ததாகவோ குறிப்பிட படவில்லை என்றால் அது பற்றி தெரியாது. ஆணையர் தாக்கல் செய்துள்ள ஆணையர் அறிக்கைக்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆட்சேபனையில் மின் இணைப்பு சம்பந்தமாக குறிப்பிடபட வில்லை என்றால் சரிதான், ஆனால் மின் இணைப்பு உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள மின் இணைப்பு அட்டையானது இந்த வழக்கிற்கு தொடர்புடையது அல்ல என்றால் சரியல்ல.

4) நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் இவ்வழக்கு சொத்திற்காக வரைபடம் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் சிறிய அறை இருந்ததாகவோ, மின் இணைப்பு இருந்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான், மாதிரி வரைபடத்தில் நான்கு பக்க எல்கைகள் மட்டுமே முக்கியம், மற்ற விபரங்கள் தேவையில்லை என்பதால் சொல்லவில்லை. வழக்கு 1ம் தபசிலாக குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் மேற்கு பக்கம் தான் சர்வே எண் 495/6 அமைந்துள்ளது என்றால் சரிதான், சர்வே எண் 495/6 தரிசு நிலமாகும். வழக்கு 1ம் தபசிலாக குறிப்பிடப்பட்டுள்ள பகுதியின் வடக்கு பக்கம் தான் சர்வே எண் 495/6 அமைந்துள்ளது என பிராதில் குறிப்பிடப்பட்டுள்ளது அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பது தவறு என்றால் அவ்வாறு குறிப்பிட படவில்லை.

5) சர்வே எண் 495/6 -என்பது குடியிருப்பு பகுதி இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 5 புகைப்படத்தில் தகர சீட் வைத்து அடைக்கப்பட்டுள்ளது, அது நான் அமைத்தது தான் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ. 5 புகைப்படங்களில் 5, 6, 7, 8 புகைப்படத்திலுள்ள இடம் தபசில் சொத்திற்கு வடக்கு பக்கம்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.11 15:53:07 +0530

உள்ள இடம் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ. 5 புகைப்படங்களில் 5, 6, 7, 8 புகைப்படத்திலுள்ளவாறு கார்கள் மேற்படி நிலத்தில் நிற்பது எனக்கு எவ்வித இடையூறும் இல்லை என்றால் சரியல்ல, எனது நிலத்தின் வழியாக தான் புலங்கி வருகிறது. எனது இடத்தின் வடக்கு பக்கம் உள்ள வாகனங்கள் தாவா சொத்திற்கு கிழக்கு பக்கமுள்ள பொது பாதை வழியாக செல்வதற்கு இடமுள்ளது என்றால் சரியல்ல, பொது பாதையில் கார்கள் செல்லும் அளவிற்கு இடமில்லை. தாவா சொத்திற்கு கிழக்கு பக்கமுள்ள பொது பாதை என்பது எவ்வளவு அடி இருக்கும் என்றால் 1 1/2 மீ அளவு இருக்கும். மேற்படி 1 1/2 மீ அளவுக்கு மேற்கு பக்கமுள்ள இடம் என்னுடையது என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

6) நான் குறிப்பிடுவது போல பாதையானது 1 1/2 மீ அளவு கிடையாது என்றாலும், அதற்கு மேற்கு பக்கமுள்ள இடம் என்னுடையது கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் கிழக்கு பக்கம் வாகனம் செல்லும் அளவிற்கு பாதை உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய இடத்தையும் ஆக்கிரமித்து தான் பாதை செல்கிறது. ஆணையர் அறிக்கையை பார்வையிட்டாலும், புல வரைபடத்தை பார்வையிட்டாலும் நான் கூறுவது பொய் என தெரிய வரும் என்றால் சரியல்ல. எனது ஊரில் இது வரை இன கலவரம் நடந்ததில்லை என்றால் சரிதான். எனது ஊரில் நாங்கள் சிறுபான்மையினராக இருப்பதாகவும், அதனால் பிறர் என்னை காலி செய்ய வைக்க வேண்டும் என்ற அடிப்படையில் ஏற்பட்ட பிரச்சனை காரணமாக நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், அது வா.சா.ஆ.7 முதல் தகவல் அறிக்கையாக பதியப்பட்டது, 2ம் பிரதிவாதி என்னை தாக்க வந்த காரணத்தினால் நான் புகார் அளித்தேன். மேற்படி முதல் தகவல் அறிக்கை என்ன ஆனது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ. 7 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும்



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.11 15:53:11 +0530

இல்லை என்றால் சரியல்ல, சம்பந்தம் உள்ளது. இவ்வழக்கிலுள்ள 2, 4 பிரதிவாதிகளுக்கும், இவ்வழக்கு சொத்திற்கும், இவ்வழக்கு சொத்திற்கு வடக்கு பக்கமுள்ள சொத்திற்கும் எவ்வித தொடர்பும், உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல, உரிமை உள்ளதாக கூறுவதால் தான் நான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் செல்வ ராஜ் -டமிருந்து கிரையம் பெற்ற இடத்தையும் மீறி கிழக்கு பக்கமுள்ள பாதையின் ஒரு பகுதியை உரிமை கோருவதால் தான் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எனது மகன் மூலமாக தாவா ஏற்பட்டது என்றால் சரியல்ல. அரசிற்கு பாத்தியப்பட்ட இடத்தில் வாகனங்கள் செல்வதற்கு தடுப்பதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரிதான், எனது நிலத்தின் வழியாகவும் வாகனங்கள் செல்கிறது.

7) 15.06.2023 ம் தேதியன்று 2 முதல் 4 பிரதிவாதிகள் வடகிழக்கு மூலையிலுள்ள வேலியை அப்புறப்படுத்தியதாக நான் பிராதில் கூறியுள்ளது வழக்கிற்காக பொய்யாக கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆணையர் தபசில் சொத்தை பார்வையிடுவதற்கு முன்பாக வழக்கு சொத்தின் கிழக்கு பக்கமும், வடக்கு பக்கமும் வேலி அமைக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான், ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்தது. மேற்படி வேலியை தாண்டி உள்ள இடத்தில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல, எனக்கு உரிமை உள்ளது. மேற்படி வேலியை தாண்டி எனக்கு எவ்வளவு இடம் உள்ளது என்றால் வேலியை தாண்டி கிழக்கு பக்கம் சுமார் 1மீ அளவுக்கு எனது இடம் உள்ளது.

8) மேற்படி வேலியை தாண்டி சுமார் 1 மீ அளவுக்கு எனது இடம் உள்ளதாக ஆவணங்களுக்கு முரணாகவும், கற்பனையாகவும் கூறுகிறேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கு சொத்தை சுற்றியுள்ள வீடுகளில் குடியிருக்கவில்லை என்றால் 4 ம் பிரதிவாதியின் வீடு சுமார் 60 அடி தள்ளி உள்ளது. நான் தாக்கல் செய்துள்ள



MITHUNA A KAISER
Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.11 15:53:17 +0530

வா.சா.ஆ. 5 புகைப்படத்தில் உள்ள வாகனங்கள் பிரதிவாதிகளுக்குரிய வாகனங்கள் இல்லை என்றால் சரியல்ல, அது 2 ம் பிரதிவாதியின் வாகனம் ஆகும். 2 ம் பிரதிவாதிக்கு கார் உள்ளதாக வழக்கு பிராதில் குறிப்பிடவில்லை என்றால் ஆட்டோ உள்ளது, கார் உள்ளது.

9) நான் வழக்கில் சொல்லக்கூடிய காரண காரியங்கள் தவறானவை, அதனால் எனது வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

( குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது)

**மறுவிசாரணை** - இல்லை

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.02.11 15:53:20 +0530